

முரசொலி செல்வம் அவர்களின் நினைவு நாளில், கழகத் தலைவர் மு.க.ஸ்டரின் அவர்கள், சென்னை – கோபாலபுரத்தில் உள்ள முரசொலி செல்வம் அவர்களின் இல்லத்தில் உள்ள திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார். கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு எம்.எல்.ஏ., பி.கே.சேகர்பாபு, எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர்கள் ரிஷிவந்தியம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி., உளுந்தூர் பேட்டை எம்.எல்.ஏ., ஜி.வசந்தவேலு, புலவர் முத்து வாவாசி ஆகியோர் உடன் உள்ளார்கள்.

தி.மு.க., தோல்வியில் வெற்றி! த.வெ.க., வெற்றியில் தோல்வி!

இடைத் தேர்தல் முடிவுகள் குறித்து – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

சென்னை, அக்.11- முரசொலி செல்வம் அவர்களின் 2ஆம் நினைவு நாளான நேற்று, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை 'முரசொலி' அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அப்போது செய்தியாளர்கள் இடைத்தேர்தல் முடிவு குறித்து தொடுத்த வினாவிற்குப் பதிலளித்த கழகத் தலைவர் அவர்கள்; தி.மு.க.வைப் பொறுத்தவரை தோல்வியில் வெற்றியடைந்துள்ளது. த.வெ.க. வெற்றியில் தோல்வி அடைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் அவர்கள் கூறியதாவது:-

"மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் முடிவு குறித்து ஏற்கனவே தாம் விரிவாக அறிக்கை வெளியிட்டிருக்கிறேன். ஒரே வார்த்தையில் கூறவேண்டும் என்றால், தி.மு.க.வைப் பொறுத்தவரை தோல்வியில் வெற்றியடைந்துள்ளது; அதேநேரம், த.வெ.க. வெற்றியில் தோல்வியடைந்துள்ளது!" இதுவே எனது கருத்து.

இவ்வாறு கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சென்னை அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் கழக கலை – இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாநில துணைச் செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு தனது பிறந்தநாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி உள்ளார்.





கழகத்தின் அறிவுச்செல்வம் `முரசொலி' செல்வம் அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி, `முரசொலி' அலுவலகத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்ட படத்துக்கும், கோபாலபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்ட அவரது திருவுருவப் படத்துக்கும் கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். கழக முன்னோடிகள் உடன் உள்ளார்கள்.

மண்ணை விட்டு மறைந்தாலும் என் மனதை விட்டு அகலாத – பேரன்பிற்குரிய

செல்வம் அண்ணனின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன்!

நினைவு நாளில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உருக்கம்!

சென்னை, அக். 11- முரசொலி செல்வம் அவர்களின் நினைவுநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த வலைதளப் பதிவில், "மண்ணை விட்டு மறைந்தாலும் என் மனதை விட்டு அகலாத பேரன்புக்குரிய செல்வம் அண்ணன் அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

"என் வாழ்வில் கிடைத்தற்கரிய பெருஞ்செல்வமாக நான் பெற்றிருந்த அண்ணன் முரசொலி செல்வம் அவர்களின் நினைவு நாள்.

தலைவர் கலைஞரே அவருக்குப் பெயர்சூட்டி, தாயைப் போல வளர்த்தெடுத்தார். கலைஞரின் நிழலில் வளர்ந்த செல்வம் அவர்கள் கழகப் பணி செய்வதைத் தவிர வேறு எதுவும் அறியாதவர், எதையும் நாடாதவர்.

செல்வம் அவர்கள் எனக்கு அண்ணனாகவும் இருந்திருக்கிறார், ஆசானாகவும் இருந்திருக்கிறார், நெருக்கடியான நேரங்களில் ஆறுதலாகவும் இருந்திருக்கிறார்.

மண்ணைவிட்டு மறைந்தாலும் என் மனதைவிட்டு அகலாத பேரன்புக்குரிய செல்வம் அண்ணன் அவர்களின் நினைவுகளைப் போற்றி வணங்குகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.





கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று அவரது இல்லத்தில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., தமது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் பி.கே.சேகர்பாபுவின் துணைவியார் திருமதி சாந்தி, புதல்வர் விக்னேஷ் ஆகியோர் உள்ளார்கள்.

